**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் கடந்த ஜூலை 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் அனைத்தும் தனியார் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டது. அதை தொடர்ந்து இந்நாள் வரை குப்பைகள் நகர் முழுவதும் தேங்கி கிடக்கிறது. உப்பளம் உரக்கிடங்கில் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கு பாதிரியார் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதினால் அங்கு குப்பைகளை கொண்டு செல்ல இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மழை பெய்து வருவதால் தேங்கி இருக்கின்ற குப்பைகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதோடு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே பொது சுகாதார நலன் கருதி தேங்கியுள்ள குப்பைகளை தனியார் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தவும் அதற்கான செலவு தொகை ரூ.100000/–க்கும் (ஒரு லட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.9998/2017/எச்1

**தீர்மானம் எண்.1734 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடைகள், கவியரசு கண்ணதாசன் வணிகவளாக கடைகள் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகளுக்கு வர்ணம் பூசி கடை எண்கள் எழுதப்பட்டது. மேலும் புகைப்படம் எடுத்தது சேர்த்து ரூ.6663/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1735 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலக கடிதம் எண்: 2516/M/2012- நாள் 31.12.2012–ன் படி, தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு அரசு உத்தரவு படி, நகர்மன்ற வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும், அரசு கடிதம் எண்: 5830/ME-1/2013-1 நாள்: 18.03.2013–ல் முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து நியமனம் செய்யப்பட்டுள்ள நகர்மன்ற வழக்கறிஞர்கள் நியமனம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.15/2013/Legal நாள்: 27.03.2013–ன் படி அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு அரசு உத்தரவு படி வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதில் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில், நாகர்கோவில் நகராட்சிக்காக வாதாட நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ள வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன்

த/பெ.பொன்னுசாமி அவர்களை, குளச்சல் நகராட்சிக்கும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வாதாட நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்து கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1578/2017/இ1

**தீர்மானம் எண்.1736 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.39–ஐ கடையில் உரிமைதாரர் திரு.C.பால்தாஸ் தனக்கு கடை நடத்த முடியாததால் கடையை 7/2017–ல் நகராட்சியில் ஒப்படைப்பு செய்து மேற்படி கடைக்கான வாடகை நிலுவை தொகையினை வைப்புத் தொகையில் ஈடு செய்ய தெரிவித்துள்ளார். எனவே அன்னாரது பெயரில் உள்ள மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1737 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திருமதி.S.மாரியம்மாள் துப்புரவு பணியாளர் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி மற்றும் நகராட்சி பஙகளிப்புத் தொகை ரூ.10000/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1349/2017/சி1

**தீர்மானம் எண்.1738 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை பிரித்து வழஙகவும், பிளாஸ்டிக் பிரித்து பணியாளர்களிடம் வழஙகவும், பொது இடஙகளில் குப்பைகள் சேகரமாவதை தவிர்க்கவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு முக்கிய இடஙகளில் பிளாச் பேனர்கள் வைக்கப்பட்ட வகையில் ரூ.2800/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.1739 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு 2017–18–ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவஙகள், பதிவேடுகள் மற்றும் பிரிண்டர் டோனர் ஆகிய பொருட்களை வழஙகுவதற்கு அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1347/2015/எச்1

**தீர்மானம் எண்.1740 ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.8

இந்நகராட்சியில் குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக் தொட்டிகளிலிருந்து பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாத காரணத்தால், குடிநீரில் பிளீச்சிங பவுடர் (Chlorination) கலந்து வழஙகுவதற்கு, குடிநீர் வினியோக பணியாளர்கள் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் மேல் பகுதிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இம்முறையில் தொடர்ச்சியாக பிளீச்சிங பவுடர் கலக்க இயலவில்லை. இந்நிலையில் தற்போது மாவட்டம் முழுவதும் பரவலாக டெஙகு காய்ச்சல் பரவி வருவதால், மாவட்ட சுகாதார அலுவலர்கள் நகராட்சி பகுதிகளில் நேராய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் தெரிவித்துள்ள அறிவுரைகளின் படி, நகராட்சி மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மேற்பகுதியில் Syntex Tank அமைத்த பிளீச்சிங பவுடர் கலந்து குடிநீர் வினியோகம் செய்யும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/–க்கும் , மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1288/2017/இ1

**தீர்மானம் எண்.1741 அஙகீகரிக்கப்பட்டது.**